தமிழ்ச் சிட்டு



தீர்வுசெய்! முனைந்துசெல்!

உண்மையும் நேர்மையும்
ஊக்கமும் ஒழுக்கமும்
உன்றனை ஏற்றும் படிகள்!
அண்மையோ சேய்மையோ
ஆர்வமாய் உழைத்திடு!
ஆக்கமோ பழமரச் செடிகள்!

தீமையும் நன்மையும்
இலைகளும் பூக்களும்!
சிந்தனை செய்; அது விதைதான்!
ஆமையும் முயல்தனை
அன்றைக்கு வென்றது!
அன்றன்றும் நடக்கின்ற கதைதான்!

சோர்வும் சோம்பலும்
உனை மென்று தின்பன!
சுறுசுறுப்பே, உனை உயர்த்திடும்!
தீர்வுசெய்; முனைந்துசெல்;
திகைத்துநின் றிடாதே!
திசைதிசை வெற்றிகள் குவித்திடும்!

குரல் : 21
இசை : 3

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை:
உருபா : 1-00

தெரிந்து கொள்ளுங்கள்

- இந்தியாவில் தீப்பெட்டி முதன் முதல் விற்பனைக்கு வந்தது 1910-இல்.
- தமிழில் படகு, அம்பி, மிதவை, ஓடம், புணை, தோணி, பரிசல், பகடு, பஃறி, தெப்பம் ஆகிய சொற்கள் படகின் பல வடிவங்களைக் குறிக்கும் சொற்கள்.
- இப்பொழுது உள்ள திருவள்ளுவர் படத்தை வரைந்த ஓவியரின் பெயர் வேணுகோபால் (சர்மா) என்பதாகும்.
- 'பிளாஸ்டிக்ஸ்' (Plassics) என்னும் ஞெகிழிப் பொருளை முதன்முதல் காய்கறிகள், விலங்குகளின் கொழுப்பு போன்ற பொருள்களிலிருந்து அமெரிக்காவில் 1845-ஆம் ஆண்டில் செய்தார்கள். ஆனால் இன்றைய நிலையில் ஞெகிழிப் பொருள்கள் நிலக்கரி, சுண்ணாம்புக்கல், தூய்மை செய்யப் பெறாத கன்னெய் (பெட்ரோலியம்), உப்பு, தண்ணீர் ஆகிய பொருள்களிலிருந்து செய்யப் பெறுகின்றன.
- இந்தியாவின் மக்கள் தொகை ஏறத்தாழ 80 கோடி. இவர்களில் இரண்டரைக் கோடிப் பேர்களுக்குத்தான் ஆங்கிலம் பேச, எழுதத் தெரியும்.
- இந்தியாவில் மொத்தம் 14 பெரிய ஆறுகள் உள்ளன; அவற்றுள் மிகச் சிறிய ஆறே காவிரியாறு.
- மாந்தனுக்குள்ள மூளையின் ஆற்றலை எவருமே முழுமையாகப் பயன்படுத்துவதில்லை என்றும், பெரிய பெரிய பேரறிஞர்கள் (மேதாவிகள்)கூட, தங்களின் மூளையின் ஆற்றலில் 5 விழுக்காட்டைத்தான் பயன்படுத்துவதாகவும் மூளையியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.
- இந்தியாவில் ஓர் ஆண்டுக்கு 5 கோடியே 20 இலக்கம் கல்லெடை (டன்) கன்னெய் (பெட்ரோலியம்) தேவைப்படுகிறது. ஆனால் இந்தியாவிலேயே ஓர் ஆண்டுக்கு 3 கோடியே 30 இலக்கம் கன்னெய்தான் உருவாக்கப்படுகிறது. எனவே மீதி ஒரு கோடி 90 இலக்கம் கல்லெடையுள்ள கன்னெயை இந்தியா ஒவ்வோர் ஆண்டும் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இதற்காக மட்டும் அரசு ஆண்டுக்கு 6.400 கோடி உருபாவைச் செலவழிக்கிறது.
- தமிழ்நாடு அரசு வெளியிடும் பரிசுச்சீட்டு வழி ஆண்டுக்கு இரண்டரைச் கோடி உருபா வருமானம் அரசுக்குக் கிடைக்கிறது.
- இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த பொழுது அங்கு நடந்த போராட்டங்களில் இறந்து போனவர்களின் எண்ணிக்கை 1157. காணுமற்போனதாகச் சொல்லப்படும் 34 பேர்களும் இதில் அடங்குவர்.
- இந்தியாவில் மொத்தம் 7,800 மருத்துமனைகள், 26,000 பண்டுவமனைகள் (சிகிச்சையகங்கள்); 14,000 தொடக்க (ஆரம்ப) உடல்நல நடுவங்கள், 12,000 குமுக உடல்நல (சுகாதார) நடுவங்கள், ஓர் இலக்கத்திற்கும் அதிகமான உடல்நலத் துணை நடுவங்கள், உள்ளன என்று அரசின் மருத்துவ மதிப்பீடு தெரிவிக்கிறது.
- இந்தியாவில் மொத்தம் 439 மாவட்டங்கள் உள்ளன;

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்: 21] (தி.பி-2021) மட-துலை (செப்-நவ 90') [இசை-3

உடன்பாடும் முரண்பாடும்-2

ஒருவன் தன் காதலியுடன் பேசிக் கொண்டிருப்பான்; அந்த நேரத்தில் அவன் தந்தையின் கண்டிப்பு பற்றிய நினைவு வரும்; அதே பொழுது தன் காதலியின் தலைமுடியை அவன் தன் கையால் நீவிக் கொண்டிருப்பான்.

இங்கு, காதலியுடன் பேசிக் கொண்டிருப்பது மனவுணர்வு; தந்தையைப் பற்றிய சிந்தனை அறிவுணர்வு; காதலியின் தலையை வருடிக் கொண்டிருப்பது உடலுணர்வு; இம் மூன்று உணர்வுகளை-யும் வேறு பிரித்து அறிய முடியாதபடி அவன் இயங்கிக் கொண்-டிருப்பான்! இதுதான் உலக இயற்கை!

தெளிவாகச் சொன்னால், நம் ஒவ்வொருவரும், இம் மூன்று உணர்வு அலைகளிலும் சிக்கிச் சுழன்று கொண்டு தவித்தும் தத்-தளித்துக் கொண்டும் உள்ளோம். என்றும் எந்த நேரத்தும் எந்த நிலையிலும் நாம் தனித்தே இருந்ததில்லை. உடலால் நாம் கூட்டத்-துடன் இருப்போம்; மனத்தால் நாம் நோயாளியான மனைவியைப் பற்றிச் சிந்தித்தவாறு இருப்போம்; அறிவால் நாம் நாளை கொடுக்கப்பட வேண்டிய கடனுக்கான பொருளைப் பற்றி

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்;
ஆசிரியர்: மா. பொழிலன்;
தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005; (தமிழகம்)

எண்ணிக் கொண்டிருப்போம்; இப்படித்தான் நாம் இருக்க வேண்டி உள்ளது.

இனி, ஒருவர்க்குள்ள மூன்று உணர்வுக் கூறுகளாகிய மனம், அறிவு, உடல் ஆகிய ஒவ்வொரு கூறும் மும் மூன்று பிரிவுகளாகப் பிரிவு படக் கூடியது. அவை வருமாறு:

மனம்—> நேர்மனம் எதிர்மனம் நடுமை மனம்.
அறிவு—> நேர் அறிவு எதிர் அறிவு நடுமை அறிவு.
உடல்—> நேர் உடல் எதிர் உடல் நடுமை உடல்.

இவற்றுள்,

நேர் மனம் ஒன்றை உடன்பட்டுச் சிந்திக்கும்.
எதிர் மனம் ஒன்றை முரண்பட்டுச் சிந்திக்கும்.
நடுமை மனம் ஒன்றைப் பகுதி உடன்பட்டும், பகுதி முரண்பட்டும் } சிந்திக்கும்.

அதேபோல், அறிவும், உடலும், நேர், எதிர், நடுமை என்னும் அளவில், உடன்பட்டும், முரண்பட்டும், பகுதி உடன்பட்டும், பகுதி முரண்பட்டும் சிந்திக்கும் தன்மை உடையன.

இந்த வகையில் மூவகை காரணக் கூறுகளும், ஒன்பது வகையாகப் பிரிந்து இயங்கிக் கொண்டே இருக்கும். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒன்பது ஒன்பது பிரிவுகளாக இயங்கும் காரண உணர்வுக் கூறுகளை அவர்கள் பிரித்துணர்வதும் உய்த்துணர்வதும் கடினம். ஆனால், அவை கருமியக் கூறுகளில் படிந்து இயங்குவதை நாம் கவனித்து உணரலாம். அவற்றைக் கீழ்வரும் கருமிய (செயல்) எடுத்துக் காட்டுகளால் அறியலாம்.

மனம் என்னும் காரணக் கூறின் அடிப்படையில், ஒரு கருத்தை,

அகரன் என்பவன் உடன்பட்டுச் சிந்திக்கலாம்;
மகரன் என்பவன் முரண்பட்டுச் சிந்திக்கலாம்;
இகரன் என்பவன் பகுதி உடன்பட்டும் பகுதி முரண்பட்டும் } சிந்திக்கலாம்.

அதே போல், அறிவு என்னும் காரணக் கூறின் அடிப்படையில் ஒரு கருத்தை,

மல்லி என்பவள் உடன்பட்டுப் பேசலாம்;
அல்லி என்பவள் முரண்பட்டுப் பேசலாம்;
வல்லி என்பவள் பகுதி உடன்பட்டும் பகுதி முரண்பட்டும் } பேசலாம்.

அதே போல், உடல் என்னும் காரணக் கூறின் அடிப்படையில், ஒரு செயலை,

கதிரவன் நிலவுக்கு உடன்பட்டுச் செய்யலாம்;
கதிரவன் அல்லிக்கு முரண்பட்டுச் செய்யலாம்;
கதிரவன் தாமரைக்குப் பகுதி உடன்பட்டும் பகுதி உடன்பட்டும் } செய்யலாம்.

இம் மூவகைக் கூறுகளிலும் ஒன்பது பிரிவுகளிலும் வெவ்வேறு இருவர்க்கிடையில் வெவ்வேறு விழுக்காட்டு அளவில் எண்ணம், சொல், செயல் ஆகியவை அமைவதுண்டு;

இவற்றுள், மனத்தால் உடன்பட்டுச் சிந்திக்கும்—இருவர் அறிவால் முரண்பட்டுச் சிந்திக்கலாம்; உடலால் வேறுபட்டு இயங்கலாம் அவர்கள் மனத்தால் அன்பு கொண்டு நட்புடன் உறவாடலாம்; ஆனால் அறிவால் ஒருவர் கருத்தை ஒருவர் ஏற்றுக் கொள்ளாமல் முரண்பட்டுப் பேசுவார்கள்; செயலால் வேறுபட்டு இயங்குவார்கள். மனத்தால் உடன்பட்டு அன்புள்ளவர்கள் என்பதாலேயே இருவர் அறிவால் உடன்பட்டுவிட மாட்டார்கள்; இனி, மனத்தாலும் அறிவாலும் உடன்பட்டுப் பேசுபவர்களே செயலால் உடன்பட்டு விடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது.

மனம், அறிவு, உடல் மூன்றாலும் உடன்பட்டும், முரண்பட்டும், பகுதி உடன்பட்டும், பகுதி மாறுபட்டும் இயங்குகின்ற இருவர் நிலைகளை மட்டும் கீழே பிரித்துக் காட்டியிருக்கிறோம்; அவர்களின் இயக்கம் எத்தனை வேறுபாடுகள் கொண்டிருக்கின்றன என்பதை ஆழ்ந்து பாருங்கள்.

இங்கு, உடன்பாட்டைக் கூட்டல் (+) குறியாலும், முரண்பாட்டைப் பெருக்கல் (×) குறியாலும், பகுதி உடன்பாட்டையும், பகுதி முரண்பாட்டையும் கூட்டல், பெருக்கல் (+×) ஆகிய இரண்டு குறிகளாலும் காட்டியிருக்கின்றோம். அவ்விருவரும் சேர்ந்து இயங்கும் இயக்கத்தின் விளைவும் இங்கே கூறப் பெற்றுள்ளது.

முதலிருவர்:	மனம்	அறிவு	உடல்
அகரன்	×	×	×
இகரன்	×	×	×

இயக்கம்: இருவரும் மூன்று காரணக் கூறுகளாலும் முரண்பட்டிருப்பதால், இருவரும் எதிலும் சேர்ந்து இயங்கவே இயலாது; எனவே இணையவே கூடாது; இணைந்தால் பகைதான் எஞ்சும்;

''கனவினும் இன்னாது மன்னோ சொல்வேறு
செயல்வேறு பட்டார் தொடர்பு;'' (819)

2. ஆம் இருவர்:

நள்ளி	+	×	×
முள்ளி	+	×	×

இயக்கம்: அவர்கள் இருவரும் அவ்வப் பொழுது பேசிக் கொள்கின்ற அன்பர்களாக மட்டும் இருக்கலாம். நட்புக் கொள்ள இயலாது; அதிகமாக நெருங்கினால் பிணக்கு வரலாம்; செயலில் இணைய முடியாது;

''மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற் றன்று'' (825)

3-ஆம் இருவர்:

வல்லி —	+	+	×
அல்லி	+	+	×

இயக்கம்: இருவரும் நல்ல நண்பர்களாக இருக்க முடியும். பேச்சிலும் இணைந்தே மகிழ்வார்கள் ஆனால், செயலில் இணைந்தால் தொடர்ந்து இயங்க முடியாது. பிரிந்துவிடுவார்கள்.

"எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்." (514)

4-ஆம் இருவர்:

கிள்ளை	+	+	+
வள்ளி	+	+	+

இயக்கம்: இருவரும் உயிர் நட்புக் கொள்ளலாம் மகிழ்வுடன் எந்தக் கருத்தையும் பற்றிப் பேசி, அளவளாவி உடன்பாடு கொள்ளலாம். முரண்பாடு என்பதே இவர்களிடம் வராது. இருவரும் ஒத்த உளத்தினராய், ஒரே கருத்தினராய், ஒரே வினையில் ஈடுபட்டுப் பயன் பெறலாம். இவர்கள் நட்புக்குத் தொடக்கந்தான் உண்டு; பிரிவில்லை. இருவரும் எந்தச் செயலிலும், வணிகத்திலும் இணைந்து ஈடுபட்டு வெற்றியும் பெறலாம். இவ்விருவரும் ஆண், பெண்ணாக இருப்பின் தாராளமாக மணம் செய்து கொள்ளலாம். இவர்கள் இல்லற வாழ்க்கை முழு மகிழ்ச்சியுடையதாய் முழு வெற்றி பெறும். எண்ணத்தாலும் கருத்தாலும் செயலாலும் இவர்களுக்கு இறுதி வரை இன்பமே நிகழும்.

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. (789)

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். (462)

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (783)

இனி, இம் மூவகை அடிப்படைக் காரணக் கூறுகளும், வேறு வேறு வகையாக மாறுபட்டு, பல்வேறு உணர்வு மாற்றங்களையும் செயல் மாற்றங்களையும் உருவாக்குவதைக் கணக்கியல் அறிந்தவர்கள் எளிதில் உணர்ந்து கொள்வர்.

சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்வதானால், மக்களிடம் எத்தனைக் கோடி உருவ வேறுபாடுகள் இருக்கின்றனவோ, அத்தனைக் கோடி மன வேறுபாடுகளும், அறிவு வேறுபாடுகளும் இருக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

(தொடரும்)

பிரெஞ்சு மொழி!

பிரான்சில் மட்டுமின்றி அண்டை நாடுகளிலும் ஓரளவு அறிமுகமான மொழி பிரெஞ்சு. கனடாவின் இரண்டு ஆட்சி மொழிகளுள் இதுவும் ஒன்று. சுவிட்சர்லாந்தின் நான்கு ஆட்சி மொழிகளுள் பிரெஞ்சும் இடம் பெற்றிருக்கிறது. வட ஆப்பிரிக்காவிலும், உலகில் பிரஞ்சு ஆட்சி நடைபெற்ற பல பகுதிகளிலும் பிரெஞ்சு மொழி இன்னும் பரவி வருகிறது. எடுத்துக்காட்டாக கனடா, மொரீசியசு, இலாவோசு, கம்பூச்சியா, வியட்நாம், எகிப்து, காங்கோ, செனகல், ஐவரி கோசுட், கினியா, அப்பர், ஓல்ட்டா, டோகோ, மாலி, பெனின், புருண்டி, மொராக்கோ, டுனீசியா மாரிடோனியா, கமரூன், கபோன், நைசர், செயரே, நடு ஆப்பிரிக்கன் குடியரசு, கொமரோசு, சிபுட்டி, மடகாசுகர், செசில்சு, அண்டொர்ரா, பெல்சியம், லக்சம்பர்க், மொனேகோ, சுவிட்சர்லாந்து, தென் அமெரிக்கா, டாமினிகா, கயித்தி, டிரினிடாட், டொபாகோ,—முதலிய நாடுகளில் பிரெஞ்சு மொழியும் பேசப் பெறுகிறது. பல நாடுகளில் பிரெஞ்சு ஆட்சி மொழியாகவும் உள்ளது. உலக ஒன்றியப் பேரவை (ஐ.நா)—இன் ஆட்சி மொழிகளுள் பிரெஞ்சும் ஒன்று.

பிரெஞ்சு உலகில் சிறந்த மொழிகளுள் ஒன்று. அது தெள்ளத் தெளிந்தது. ஊற்று நீர் போன்ற ஒரு மொழி. 1918 வரை ஐரோப்பாவில் அரண்மனை மொழியாகவும், அனைத்து நாட்டு அரசியல் உறவுக்கு உதவும் மொழியாகவும் இது விளங்கி வந்தது.

ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு சிறப்பியல்பு உண்டு. ஆங்கிலத்தின் தனித்தன்மை, காலத்துக்கு ஏற்றபடி தன்னை அமைத்துக் கொள்வது. தமிழின் பெருமை தொன்மை கலந்த கன்னித்தன்மை. பிரெஞ்சின் இயல்பு அதன் தெளிவு.

'பிரெஞ்சு தெளிவு' (La Carte Francaise) என்னும் பழமொழியே இதற்குச் சான்று. ஐயப்பாடின்மை, பொருத்தமான சொற்கள் ஆகிய பண்புகள் இந்த மொழிக்கு உண்டு. நுண்ணிய கருத்துகளை வெளியிடும் ஆற்றல் பெற்றது பிரெஞ்சு மொழி. எனவே உலக நாடுகள் தங்களுக்குள் செய்து கொள்ளும் உடன்பாடுகளைப் பிரெஞ்சு மொழியிலேயே எழுதிக் கொள்ளுகின்றன. ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரு மொழிகள் மட்டுமே உலக அறமன்றத்தில் பயன் படுத்தப் படுகின்றன.

பிரெஞ்சு இனிமையான மொழி. "உன்னுடைய நாயை விரட்ட ஆங்கிலத்தில் பேசு. மனைவியோடு கொஞ்சி விளையாட பிரெஞ்சில் பேசு" என்பது ஒரு பழமொழி.

விக்டர் யூகோ, எமிலி சோலா போன்ற இலக்கிய மேதைகள் பிரெஞ்சு மொழிக்கு அழியாத் தன்மையை வழங்கியுள்ளனர். இருபதாம் நூற்றுண்டில் பிரெஞ்சு உரை நடைக்கு ஏற்றம் தந்திருப்பவர்கள்—அனதோல் பிரான்சு, கோல்ட், பிரவுஃச்ட், ரோமியின் ரோலந்து. சிறுகதை மன்னன் மாப்பசானின் அந்தத் துறையில் உலக எழுத்தாளர்க்கு வழிகாட்டி.

கிழக்கு மேற்கு செருமனிகள்!

அண்மையில் கிழக்கு செருமனியும் மேற்கு செருமனியும் ஒரே நாடாக இணைந்துள்ளது. கிழக்கு செருமனி பொதுவுடைமை நாடு. மேற்கு செருமனி முதலாளியக் குடியரசு நாடு.

இதுவரை கிழக்கு செருமனி பொதுவுடைமை நாடாக இருந்ததால், அங்கு கடுமையான அடக்குமுறை நிலவியிருந்தது. மக்கள் தங்கள் உரிமைகளைப் பேசவும் அஞ்சினார்கள். எந்த இடத்திலும் காவலர்கள் உலாவிக் கொண்டிருந்தனர். மக்கள் நான்கைந்து பேர் கூடிப் பேசவும் அஞ்சிக் கொண்டிருந்தனர்.

அங்கு உள்நாட்டுப் பொருள்களைத்தாம் பயன்படுத்த வேண்டும். அயல் நாட்டுப் பொருள்களை, ஏன், அண்டை நாடான மேற்கு செருமனியில் செய்யப்பட்ட எந்தப் பொருளை-யும் கூட, கிழக்கு செருமனியில் உள்ள மக்கள் பயன்படுத்தக் கூடாது என்பது கடுமையாகக் கண்காணிக்கப்பட்டது. உள் நாட்டில் உருவாகும் பொருள்கள், மற்ற நாடுகளில் உள்ள பொருள்களைவிட நான்கைந்து மடங்கு கூடுதல் விலைக்கு விற்கப் பெற்றன. அவை தரக் குறைவான பொருள்களாகவும் இருந்-தன. துணிகள், அன்றாடப் பயன்படுத்தப் பொருள்கள், கடிகாரங்கள், அழகுப் பொருள்கள். உணவுப் பொருள்கள் முதலிய அனைத்தும் உள்நாட்டுப் பொருள்களாக மட்டும்தாம் அங்கு விற்கப்படும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அறிஞர்கள் சிலர் பிரெஞ்சுக்காரரில் உள்ளனர். இப்-போதும் தமிழ் நூல்களை ஆராய்வதிலும் அவற்றைப் பிரெஞ்சில் மொழி பெயர்ப்பதிலும் தங்கள் வாழ்நாள் முழுவதையும் கழிக்-கும் பிரெஞ்சுக்காரர் ஒரு சிலர் இருக்கின்றனர்; —சோமலே.

கி.பி. 1975-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டரசு, தம் மொழி-யின் தூய்மையைக் காக்க பிரெஞ்சு மொழியுடன், ஆங்கிலமோ, பிற மொழிகளோ கலந்து எழுதக் கூடாது என்று சட்டம் இயற்றியது. வழக்கறிஞர்கள் சேர்ந்து, 'மொழிப் பாதுகாப்புக்-குழு' ஒன்றை அமைத்துக் கண்காணிக்கின்றனர். இந்த வகையில் தொடக்க 5 ஆண்டுகளில் 44 பேர் மீது வழக்குத் தொடுக்கப் பெற்று, அவர்கட்கு அற மன்றத்தில் தண்டனை வழங்கப் பெற்றுள்ளது.

புதிய ஆங்கிலச் சொற்களுக்கு உடனுக்குடன் பிரெஞ்சுச் சொற்களைக் கண்டுபிடித்துத் தர, அவ்வரசு தனி அமைச்ச-கத்தையே உருவாக்கி உள்ளது.

''எங்களுக்கு ஆங்கில மொழிமீது வெறுப்பில்லை; பிரெஞ்சை வளர்ப்பது மொழி வெறியன்று. மொழி இல்லையேல் மக்களில்லை; நாமும் இல்லை; கலப்படம் செய்தால் மொழி அழியும். ஆகவே மொழித் தூய்மையைக் காக்க நினைக்கிறோம்'' என்று அம் மொழிப் பாதுகாப்புக் குழுவின் தலைவர் குறிப்பிடுகிறார்.

—ராணி: 19-1-86.

இன்னொரு கொடுமை என்னவென்றால், மக்கள் அந்த நாட்டை விட்டு வேறு எந்த நாட்டுக்கும் போக அனுமதிக்கப்பட்டதில்லை. அங்கேயே பிறந்து அங்கேயேதான் சாக வேண்டும். அந்த நாட்டிலிருந்து, அண்டை நாடான மேற்கு செருமனியை எட்டிக் கண்ணாலும் பார்க்கக் கூடாது என்பது கடுமையான சட்டமாக இருந்தது.

அன்றைய நாளில் மக்கள் நிலை எப்படியிருந்தது என்பதை அறிய, கீழ்வரும் துணுக்குச் செய்திகள் பயன்படும். இவை அக்கால் வெளியானவை. பொதுவுடைமை நாடுகள் (உருசியா உள்பட) எனப்படுபவை பெரும்பாலும் இந்த நிலையில்தாம் இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

1. என்ன காரணம்?

கிழக்கு செருமனியின் சிறையில் தள்ளப்பட்ட மூன்று தொழிலாளர்கள் பின்வருமாறு பேசிக் கொண்டனர்:

''உன்னை ஏனப்பா உள்ளே தள்ளினார்கள்?''

''ஐந்து நிமையம் காலந்தாழ்ந்து தொழிற்சாலைக்கு வந்தேன்; அது குற்றம் என்று கூறி இங்கே கொண்டு வந்து விட்டார்கள்.''

இரண்டாமவன் சொன்னான்:

''உன்பாடு தாழ்வில்லையே! நான் ஐந்து நிமையம் முன்னால் வந்தேன். ஏதோ அழிம்பு (சதி) செய்யும் நோக்கத்துடன் வந்ததாகச் சொல்லி உள்ளே தள்ளி விட்டார்கள்.''

மூன்றாமவன் சொன்னான்:

''உங்கள் இருவர் நிலையும் அப்படி! என் கதையோ மிகவும் கொடுமையானது. நான் சரியான நேரத்திற்குத்தான் தொழிற்சாலைக்குச் சென்றேன். அப்படியிருந்தும் என்னைச் சிறைப்படுத்தி விட்டார்கள்.''

''ஏன்? என்ன காரணம் சொன்னார்கள்?''

''என் கடிகாரம் மிகச் சரியாகக் காலம் காட்டியதால், அது மேற்கு செருமனியிலிருந்து வாங்கப்பட்டதாயிருக்கும் என்று ஐயப்பட்டு என்னை இங்கே கொண்டு வந்துவிட்டார்கள்.''

2. வெளிநாட்டுப் பொருளைப் பயன்படுத்தியது!

கிழக்கு செர்மனியில் மேலை (மேற்கு) நாட்டு நெருப்புக் குச்சிகளை வைத்திருந்ததற்காக ஒருவன் தளை செய்யப்பட்டான். உசாவல் நடந்தது. நடுவர் அவனைக் கேட்டார்;

''அயல் நாட்டுத் தீக்குச்சிகளைப் பயன்படுத்துவது சட்டப்படி குற்றம் என்று உனக்குத் தெரியுமன்றோ?''

''தெரியும்.''

''தெரிந்திருந்தும் அவற்றை நீ ஏன் வைத்திருந்தாய்? உருசியத் தீக்குச்சிகளைத்தானே நீ பயன்படுத்தியிருக்க வேண்டும்.''

''ஐயா, நான் அயல் நாட்டுத் தீக்குச்சியைப் பயன்படுத்தியது உண்மைதான். ஆனால், அவற்றை நான் வேறு எதற்காகவும் பயன்படுத்தவில்லை. உருசியத் தீக்குச்சிகளைக் கொளுத்துவதற்காகவே, நான் அயல் நாட்டுத் தீக்குச்சிகளைப் பயன்படுத்தினேன்.''

3. ஆதாமும் ஏவாளும் பொதுவுடைமையரே!

குருசேவும் கென்னடியும் நாடுபிடி மறுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட உச்சி மாநாடு ஒன்றில் கூடியிருந்தார்கள். ஒப்பந்தப் படிவத்தில் கையெழுத்திடும் முன் குருசேவிற்கு வேடிக்கையான ஓர் எண்ணம் தோன்றியது.

''ஆதாமும் ஏவாளும் பொதுவுடைமைக் கொள்கையினர் என்று கென்னடி வெளிப்படையாக ஒப்புக் கொண்டால்தான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியும்'' என்றார் குருசேவ்.

கென்னடிக்கு ஒன்றும் புரியவில்லை. பைபிள் அறிஞரான இசரேல் தலைமையமைச்சர் டேவிட் பெங்குரியனிடம் இதுபற்றிக் கலந்தாய்வு செய்தார்.

பெங்குரியன் அதை இவ்வாறு விளக்கம் செய்தார்.

''ஆதாமும் ஏவாளும் பொதுவுடைமையர் என்று ஐயமில்லாமல் சொல்லலாமே! இதில் எதுவும் இடையூறு இல்லையே! ஆதாமுக்கும் ஏவாளுக்கும் உடுத்திக் கொள்ள ஒரு முழக் கந்தை இல்லை; அரத்திப் (ஆப்பிள்) பழத்தைத் தவிர ஆசையோடு தின்ன அடுத்த உணவுப் பொருள் இல்லை. என்றாலும் அவர்கள் என்னவோ இன்ப உலகில் இருப்பதாகவே நினைத்திருந்தார்கள். அப்படியானால் அவர்கள் பொதுவுடைமையர்கள்தாமே!''

ஃ உலகில் மிக ஆழமானது பசிபிக் கடலே. அதன் சமச்சரி (சராசரி) ஆழம் 16,000 அடிகள். பசிபிக் கடலின் மிக ஆழமான பகுதி 'குவாம்' அருகில் உள்ளது. அங்கு ஆழம் 35,000 அடிகள். பசிபிக் கடலுக்கு அடுத்தபடியானது இந்தியப் பெருங்கடலே. அதன் சமச்சரி ஆழம் 13,000 அடிகள். அதற்கு அடுத்தபடி அட்லாண்டிக் கடலின் சமச்சரி ஆழம் 12,880 அடிகள். ஆனால் அதன் மிகவும் ஆழமான பகுதி 30,246 அடிகள். அட்சன் வளைகுடா மிகப் பெரிய கடற்பகுதி. ஆனால் அதன் மிகுதியான ஆழமே 600 அடிகள் தாம். அதே போல் பால்டிக் கடலின் சமச்சரி ஆழமே 180 அடிகள் தாம்.

—ஏ. அப்துல்காதர்.
நன்றி: சமரசம் சூன் '90

பொறுத்துக் கொள்க!

பல வகையான அச்சக நெருக்கடிகளாலும், புறநிலை இடர்ப்பாடுகளாலும் இதழ்கள் காலந்தாழ்ந்து வெளி வருகின்றன. அன்புள்ளங்கள் பொறுத்துக் கொள்க.

—ஆசிரியர்.

அமைதி நாடு சுவிட்சர்லாந்து!

'சுவிசு' (Swiss) என்று அழைக்கப்பெறும் சுவிட்சர்லாந்து நாடு உலகத்திலேயே மிகவும் அழகிய நாடு. இந்நாட்டில் வெனிசு (Venice) என்னும் ஒரு நகரம் உண்டு. இதை நீர்மேல் மிதக்கும் நகரம் என்றும் கூறுகிறார்கள். காரணம் மற்ற நாடுகளில் வீட்டை விட்டு வெளியே போகவேண்டும் என்றால், சாலையில்தான் இறங்கி நடக்கவேண்டும். இந்நகரத்தில் வீட்டை விட்டுச் சாலையில் கால் வைக்கமுடியாது; தண்ணீரில்தான் கால் வைக்க வேண்டும். ஏனென்றால் சாலை முழுவதும் தண்ணீர்! ஆம்! ஆழமான தண்ணீர் சூழ்ந்த நகரம் அது. அந்தத் தண்ணீர் நிரம்பிய சாலைகள் முழுவதும் படகுகளும், விசைப் படகுகளும் போய் வந்து கொண்டிருக்கும். நாம் பேருந்து, மிதிவண்டி, இழு வண்டிகளில் செல்வதுபோல், அங்குள்ள மக்கள் படகுகளில் ஏறித்தான் கடைகளுக்கும், பிற பகுதிகளுக்கும் சென்று வருகிறார்கள். இந்த வெனிசு நகரம் முழுவதும் இப்படியே நீரின் மேல் மிதக்கும் நகரமாயிருக்கிறது. இது தவிர, சுவிட்சர்லாந்தில் உள்ள பிற நகரங்களிலெல்லாம், நம் ஊர்களில் இருப்பதைப் போல்தான் வண்டிகள், இயங்கிகள், மிதிவண்டிகள் போகும் சாலைப் போக்குவரத்துதான் நடக்கிறது.

இந்த சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள கல்லறைகள் அழகு செய்யப் பெற்ற பூங்காக்களாக உள்ளன. வகை வகையான பூச்செடிகளும், கொடிகளும், பூமரங்களும் நிறைந்திருக்கின்றன; உள்ளே போய்விட்டால் வெளியே வர மனமில்லாதபடி, அங்குக் கல்லறைகளைப் பூக்காடுகளாகவே அமைத்திருக்கின்றனர்.

இந்நாட்டில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அதன் நடுவில் ஒரு செயற்கை நீர் வீழ்ச்சியை உருவாக்கியிருக்கிறார்கள். அஃதாவது, ஏரியின் அடியில் அமைக்கப்பட்ட மிகுந்த ஆற்றல் வாய்ந்த ஓர் உந்தம் (Motor) தண்ணீரை 400 மாத்திரி (மீட்டர்) உயரத்திற்குப் பீய்ச்சி அடிக்கிறது. அது நீர் வீழ்ச்சி போல் விழுந்து கொண்டேயிருக்கிறது. இவ்வளவு உயரமான நீர் வீழ்ச்சி உலகில் எங்குமில்லை. இந்நாட்டில் எங்குப் போனாலும் அழகு அழகுதான்! எங்குப் பார்த்தாலும் மேடுபள்ளமான பச்சைப் பசும் புல் வெளிகள், பூங்காக்கள், வாவிகள், செய்குன்றங்கள், நீர் வாவிகள் முதலியவை அந்த நாட்டையே அழகுப் பூங்காவாகச் செய்திருக்கின்றன.

இங்கு ஆண், பெண்கள் சமம். பெண்கள் எல்லாப் பணிகளையும் செய்கிறார்கள். பேருந்து ஓட்டுநர்களாகவும் அவர்கள் இயங்குகிறார்கள். அப்பேருந்துகளில் நடத்துநர்கள் இருப்பதில்லை. பெண்களே தனியாக அவற்றை ஓட்டிச் செல்கிறார்கள். ஒவ்வொரு நிறுத்தத்திலும் நகர வந்து வண்டிகள் நிறுத்தப் பெறுகின்றன. ஏறவேண்டியவர்கள் ஓட்டுநர் உள்ள பக்கமாக ஏறி, அவர் அருகில் உள்ள ஒரு பொறியில் காசுகளைப் போட்டால் ஒரு துளையிலிருந்து சீட்டு வரும். அதைப் பெற்றுக்

கொண்டு ஏறியவர்கள் இருக்கைகளில் அமர்ந்து கொள்ள-வேண்டியதுதான்.

அங்குள்ள மக்களில் பெரும்பாலும் எல்லாரும் நேர்மை-யானவர்கள். கெட்டிக்காரர்கள்; தொழிலாளர்கள் உண்மை-யாக உழைப்பவர்கள்; எனவே அங்கு செய்யப்பெறும் பொருள்-களைத் தரமாகவும், நீடித்து நிற்கும்படியும் உருவாக்குகிறார்கள். அங்கு உருவாக்கப் பெறும் பொருள்களில் முகாமையானவை கடிகாரங்கள். ஆயிரக்கணக்கான அமைப்புகளில் அவை வடிவ-மைக்கப் பெறுகின்றன. அங்கு செய்யப்பெறும் கைக்கடிகாரங்-கள் உலகப் புகழ் பெற்றவை; அவை பல்லாண்டுகள் வரை பழுதின்றி இயங்குகின்றன. அத்தகைய தொழில் நுட்பமும் செய்திறனும் அமைப்பு நேர்த்தியும் கொண்டனவாக அவை விளங்குகின்றன.

அந்த நாட்டு அரசும், தனியார்களும் பல்வேறு தொழிற்-சாலைகளை நிறுவித் தொழில்களை நடத்துகிறார்கள்; எந்த ஒரு தனி ஒருவரும் தனக்குப் பிடித்த எந்தத் தொழிலையும் நடத்த-லாம். அரசுக் கட்டுப்பாடுகள் மிகமிகக் குறைவு. அதிகாரிகள், காவல்துறைக் கடுபிடிகள் அங்கில்லை; அங்குள்ள காவலர்கள், மக்களிடம் மிக அன்பாகவும், ஆதரவாகவும் நடந்து கொள்-கிறார்கள். எந்தத் தொழிலிலும், தொழில்துறையிலும் அரசுத் தலையீடுகள், சட்டத் தடுப்புகள் இருப்பதில்லை, அங்குள்ள அனைத்துத் தொழில் அமைப்புகளும், அரசுத் துறைகளும் மக்களின் நலன்களை நோக்கியே இயங்குவனவாக அமைக்கப் பெற்றுள்ளன. அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை; கையூட்டு இல்லை. எனவே அங்குப் பெரும்பாலும் திருட்டு, கொலை முதலிய குற்றங்கள் மிகவும் அரிதாகவே நடக்கின்றன, காவல்துறைக்குப் பெரும்பாலும் மக்கள் நலப் பணிகளே மிகுதி. உழவுத் தொழில் மிகச் சிறப்பாகவும் இயல்பாகவும் நடந்து வருவதால், உணவுத் தட்டுப்பாடு, பஞ்சம், பற்றுக்குறை, கலப்-படம் போன்றவற்றால் நேரும் தீங்குகள் அங்கில்லை. அங்குள்ள மக்கள் மிக்க மகிழ்வாகவும் நலமாகவும் இருக்கிறார்கள்.

வெளி நாடுகளிலிருந்து வரும் ஏதிலிகளை அங்குள்ள அரசு மிகவும் பேணி ஆதரிக்கிறது. அவர்களுக்குத் தேவையான உதவி-களைச் செய்கிறது; பொருள் முதலீடுகள் தந்து அவர்களைத் தொழில்களிலும் அமர்த்துகிறது.

இங்குக் கட்டாயக் கல்வி நன்கு செயல்படுகிறது: எல்லாக் குழந்தைகளும் படித்தே ஆகவேண்டும்; அனைவர்க்கும் இலவயக் கல்வி, இலவயத் தொழிற்பயிற்சி தரப் பெறுகின்றன. பள்ளி-யிலோ, கல்லூரியிலோ இடமில்லை என்ற பேச்சுக்கே அங்கு இட-மில்லை. பெற்றோர்கள் அங்குப் பணிகளுக்குப் போகும் பொழுது, தங்கள் குழந்தைகளை அரசுக் காப்பகங்களில் விட்டுச் செல்லலாம்; எனவே குழந்தைகள் காப்பகங்கள் ஏராளமாக இருக்கின்றன. அக் காப்பகத்திற்கென சிறு அளவுக் கட்டணமே தண்டப் பெறு-

கின்றது. அங்குக் குழந்தைகள் நன்கு பராமரிக்கப் பெறுகிறார்கள். அக் காப்பகங்களின் தலைவர்களாகப் பெரும்பாலும் பெண்களே இருக்கிறார்கள். அவர்கள் மருத்துவம், மனவியல், குழந்தை வளர்ப்பு, இவற்றில் தேறியவர்களாகவும், நன்கு கற்றவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே அவர்கள் காப்பகத்தில் விடுக்கப்பெறும் பிள்ளைகளை நன்கு பேணி, உணவளித்து, நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத் தருகிறார்கள். அவர்களுக்குச் சிறுசிறு கதைகளைச் சொல்லி, கேள்விகள் கேட்டு அறிவை வளர்க்கிறார்கள். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என்னும் பழமொழிக்கிணங்க, அப் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாக ஆகி நல்லவர்களாகவும் அறிவாளிகளாகவும் பொறுப்புள்ள குடிமக்களாகவும் ஆகிறார்கள்.

இந்நாட்டிற்கு மற்றுமொரு சிறப்பு என்னெனில் அஃது அமைதியை விரும்புகிற நாடாக இருப்பதுதான். சுவிட்சர்லாந்து இதுவரை எந்த நாட்டுடனும் சண்டைக்குப் போனதில்லை. கடந்த இரண்டு உலகப் பெருஞ்சண்டைகளிலும் அஃது எவர் பக்கமும் பங்கேற்கவில்லை. ஆனால், இரண்டு பெரும் போர்களின் இறுதியிலும் அமைவு (சமாதான) ஒப்பந்தங்கள் இந்த நாட்டில் தான் நடந்தன. இதனால் இந்நாடு வலிவில் குறைவான நாடு என்று நினைத்துவிட வேண்டாம். எந்த நாடாவது அதனுடன் சண்டைக்கு வருமானால் அதை வெல்லக்கூடிய படை வலிவு இந்நாட்டுக்கு உண்டு.

இந்த நாட்டில் மற்றுமொரு சிறப்பான செய்தி உண்டு. இங்குள்ள ஆண்களும் பெண்களும் திருமணம் செய்து கொள்ளத் தடை போடப் பெற்றிருக்கின்றது. ஆண், பெண் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பி மனம் பொருந்தினால் இணைந்து குடும்பமாக வாழலாம். பின் விரும்பவில்லையானாலும், அவர்களுக்குள் சிக்கல்கள் தோன்றினாலும், அல்லது இருவரும் வேறு இணைகளுடன் சேர்ந்து வாழ விரும்பினாலும், அவர்கள் பிரிந்து விடலாம். அவ்வாறு பிரியவேண்டி வரும் பொழுது, அவர்கள் இருவருக்கும் பிறந்த குழந்தைகள் இருக்குமானால், இருவரும் ஒப்புரவின் பேரில் தங்களுக்குள் அக் குழந்தைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். இருவருமே அக் குழந்தைகளை வளர்க்க விரும்பாமற் போனால், அப் பிள்ளைகளை அரசு தன் பொறுப்பில் எடுத்து வளர்த்துப் பராமரிக்கிறது. இவர்களுக்கு 'நாட்டுப் பிள்ளைகள்' (National Children) என்று பெயர்.

(சூன் 90 'ஆனிமன்' கட்டுரையைத் தழுவியெழுதியது.)

உறுப்பினர்களைச் சேர்த்து உதவுங்கள்!

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களை நிறுத்த வேண்டாம் என்று எழுதும் அன்பர்கள் ஒவ்வொருவரும் பத்து உறுப்பினர்களைச் சேர்ப்பது என்று உறுதி பூண்டு விட்டால் எவ்வளவு பயனுடையதாக இருக்கும்! எண்ணிப் பாருங்கள்; செயல்படுங்கள்!

வெறிநாய்க் கடி!

மருத்துவர். நஞ்சுண்டராவ்.

நாய்க்கடி என்பது ஒரு கொடிய நோயாகும். சென்னை, பொது மருத்துவமனையில் ஒரு நாளைக்கு, ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்ட மக்கள் நாய்க்கடிக்கு ஊசி போட்டுக் கொள்கின்றனராம். ஒவ்வொரு மருத்துவமனையிலும், வெறிநாய்க்கடிக்குத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளாத நோயாளிகள் எல்லோருமே இறந்து போவதைப் பார்க்கிறோம். உலகத்திலேயே இதுவரையில் ஒரே ஒருவர்தான் இந்த நோயிலிருந்து குணமடைந்ததாகச் செய்தித்தாள்களில் செய்தி வந்திருக்கிறது, இந்த நோயின் ஒரே விளைவு சாவுதான் என்று சொல்லப் படுகிறது.

வெறிநாய்க் கடியினால்உண்டாகும் நோய் 'ரேபீசு' எனப்படும். இந்நோயின் முகாமைத் தன்மையே நீரைக்கண்டு அஞ்சுவது. அதனால் இந்த நோய்க்கு மறு பெயரும் உண்டு. ஐடிரோ போஃபியா (Hydro Phobia) என்பது இதன் மறு பெயர், இந்நோய் கண்டவர்க்கு உடனே பண்டுவம் செய்யத் தொடங்கினாலும் சாவு உறுதி. ஆகையால் நாய் கடித்தாலும் இந்த நோய் வராமல் தடுப்பதே சாலச் சிறந்தது ஆகும்.

இந் நோய் ஒருவகை நச்சுயிரி(Virus)யால் பரவுகின்றது. நாய், நரி, எலி, பெருச்சாளி மற்று மேற்கிந்தியத் தீவில் உள்ள ஒருவகை வெளவால் ஆகியவற்றின் உமிழ் நீரில் இந் நோய் நுண்ணுயிரிகள் இருக்கும். கடிபட்ட காயத்திலோ அல்லது ஏற்கனவே நம்முடைய உடம்பில் உள்ள புண்ணிலோ இவ்விலங்குகளின் உமிழ்நீர் பட்டு இந் நோய் நச்சுயிரிகள் உள்ளே புகுந்து, மூளை நரம்புகளைத் தார்க்கமுறச் செய்து, அதனால், பல தசைகளைத் தளர்ச்சி அடையச் செய்கின்றன.

வீட்டில் உள்ள நாய்க்கு இந்த நோய் ஏற்பட்டால், வீட்டில் உள்ளவர்களிடம், பொதுவாக விளையாட்டுப் பழக்கம் உள்ள அந்த வீட்டு நாய், குணம் மாறுபட்டு ஒதுங்கி இருக்கும். பின் அது வெறியுடன் குரைத்துக் கண்டபடி கடிக்கவும் தொடங்கும். அந்த நாயின் நாக்கில் அதிக உமிழ்நீர் சுரக்கும். வழக்கமாக அது வாலை உயர்த்திக் கொண்டு இருக்கும் நாயாக இருந்தால், அந்த வால் உயர்த்தப்படாமல் கீழே தொங்கி இருப்பதைக் காணலாம்.

ஒரு மாந்தனை வெறிநாய் கடித்த நாளிலிருந்து, நோய்த் தன்மை தெரியும் நாள்வரை உள்ள காலம் 'நோய் முதிர் காலம்' (Incubation Period) என அழைக்கப் படுகிறது. இ'து ஏறத்தாழ நாற்பது நாள்கள் அல்லதுசில மாதங்கள் கழித்தும் வருவதுண்டு. மாந்தனிடம் இந்த நோய்காணுமானால் முதலில் அவன் அக்கறையின்றிக் காணப்படுவான். பிறகு அமைதி இழந்தவனாக, ஒரு நிலையில் இல்லாமல் இருப்பான். உமிழ் நீர் அதிகமாகச் சுரந்து, உணவு உட்கொள்ளும் தசைகள் தறிகெட்டு வேலை செய்து, ஒரு வகை வலிப்புக்கு உள்ளாகிறான். இந்த வலிப்பு தண்ணீரைக் கண்டால் அதிகமாகும். எனவே உணவு எதுவும் உண்ணாமல்

உடல் தளர்ச்சி ஏற்பட்டு இரண்டு மூன்று நாள்களில் இறந்து போகிறான்.

இந் நோயின் காரணத்தைக் கண்டுபிடித்தவர் லூயி பாச்சர் என்பவர் ஆவர். நாய் கடித்ததற்கும், நோயின் அறிகுறிகள் ஏற்படுவதற்கும் நாற்பது நாள்கள் இருப்பதால், அதற்குள் தடுப்பு ஊசியைப் போட்டு இந்த நோய்க்கான நோய் எதிர்ப்பு ஆற்றலை வளர்த்து விட்டால், நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றி விடலாம் என்று அவர் கண்டுபிடித்தார். இன்றும் இந்த நோய்க்குத் தடுப்பு முறைதான் பயன்படுகிறது. மருந்து எதுவும் கிடையாது. வருமுன்பே காக்க வேண்டும்.

தெருநாய் கடித்தாலோ அல்லது கடித்த நாய் ஓடி விட்டாலோ தடுப்பு ஊசி போட்டுக் கொள்வது நலம். ஏனென்றால், வீட்டு நாயாக இருந்தாலும் வெறி பிடித்து யாரையாவது கடித்து விட்டால், பத்து நாள்களில் பொதுவாக அந்த நாய் இறந்து விடுகிறது. அதன் மூளையில் இந் நோயின் காரணத்தைக் காணலாம். ஆகையால் கடித்த நாயை அடித்துக் கொள்ளாமல் கட்டி வைத்துக் கண்காணிப்பது நலம்.

கடித்த பின் 10 நாள்களில் நாய் இறந்தால், அது, "ரேபீசு" நோயால் தாக்குண்டது என அறியலாம். ஆனால் அந்த நாய் வேறு ஏதாவது எதிர்பாராத காரணத்தால் செத்துப் போனால், இதை உறுதிப்படுத்த இயலாது. அது நேராதபடி, கண்காணிக்க வேண்டும். பிறகு இறந்த பின், நாயின் மூளையை மருத்துவ ஆய்வு மூலம் அது 'ரேபிசா'ல் இறந்ததா என உறுதிப் படுத்தலாம்.

'ரேபீசு' வந்த நாயின் புறத்தோற்றம் கீழ் வருமாறு இருக்கும்.

1. அதன், வாயிலிருந்து எச்சில் கம்பிபோல, கூழாக ஒழுகிக் கொண்டிருக்கும்.

2. தாடை தொய்வு (பாரிசு) நோயினால் தாக்கப்பட்டுத் தொங்கிக் கொண்டிருக்கும்.

3. நாக்கு நீலமாகத் தோன்றும்.

4. அது, தள்ளாடிய படியே நடக்கும்.

5. பழக்கமானவர் அழைத்தாலும் அது வராமல் தன் நினைவற்றுப் போயிக்கும்.

'ரேபீசு' நோயினால் தாக்கப்பட்ட எல்லா நாய்களும் இறந்து விடும் என்பது உறுதியில்லை. ஆக, நாய் உயிருடன் இருந்தும் அதற்கு 'ரேபீசு' இருக்கலாம் என்பது நினைவில் இருக்க வேண்டும்.

நாய்க்கடிக்குப் பின் மேற்கொள்ள வேண்டிய உடனடியான நடவடிக்கைகள்.

1. உடனடியாகக் கடிபட்ட இடத்தை வெந்நீர் ஊற்றிக் கழுவ வேண்டும்.

2. பின், அடர்ந்த வழலை (சோப்பு) நீரால் மூன்று நான்கு முறை கழுவ வேண்டும்.

3. 'டிஞ்சர் அயோடின்' என்னும் மருந்தைக் கடிவாயில் தடவி, அதை மூடாமல் வைத்திருக்க வேண்டும்.

4. அதன் பின் மருத்துவரை அணுகித் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

வீட்டில் வளர்க்கப் படும் நாய்க்கு முன்னரே எச்சரிக்கையாகத் தடுப்பு ஊசி போட்டுத் தெருவில் அலைய விடாமல் வைத்திருப்பது நலம்.

வெறிநாய் வீட்டிலுள்ள மாட்டைக் கடித்தால், அதனால் மாட்டிற்கு இந்த நோய்த் தன்மை தெரிந்தால், அந்த மாட்டுப் பாலை அருந்தும் அனைவரும் ஊசி போட்டுக் கொள்வது நலம்.

தடுப்பு ஊசியில் சிலருக்கு நரம்புக் கோளாறுகள் ஏற்படுவது உண்டு. இந்தத் தடுப்பு ஊசி மருந்து உதகை மண்டலத்தில் குன்னூரில் உள்ள பாச்சர் நிலையத்தில் செய்யப் பெறுகிறது. இக்கால் கோழிக்குஞ்சின் கருவணுவிலிருந்து இந்த மருந்து செய்யப் பெறுகிறது. மாந்த அரத்தத்திலிருந்தும் இந்த மருந்தைச் செய்கிறார்கள்.

நாய் கடித்த பின்பு, நோய் வராமல் தடுக்க இந்த மருந்தை ஊசி போட்டுக் கொள்ளலாம். இந்த மருந்து உடலுக்குக் கெடுதல் செய்யாது. ஆனால் இந்த மருந்தின் விலை மிகுதி. ஓர் ஆளுக்குப் பயன்படுத்த வேண்டிய அளவு மருந்தின் விலை நூறு உருபா முதல் ஆயிரத்து எழுநூறு உருபா வரை ஆகலாம்.

(நன்றி : ஆசிரியரின் 'குறைவற்ற செல்வம்' என்னும் நூலிலிருந்து—சமரசம் 16-31 ஆக'த்து' 90)

கவனம் தேவை!

எண்ணங்களைப் பற்றிக் கவனமாய் இருங்கள்;
ஏனெனில் அவைதாம் சொற்களாய் வெளிவருகின்றன;

சொற்களைப் பற்றிக் கவனமாயிருங்கள்; ஏனெனில்
அவைதாம் செயல்களாக உருப்பெறுகின்றன;

செயல்களில் கவனமாய் இருங்கள்; ஏனெனில்
அவைதாம் பழக்கமாக மாறுகின்றன;

பழக்கங்களில் கவனமாய் இருங்கள்; ஏனெனில்
அவைதாம் உங்களுடைய ஒழுக்கமாகின்றன;

ஒழுக்கத்தில் கவனமாய் இருங்கள்; ஏனெனில்
அதுதான் உங்களுடைய வாழ்க்கையை உருவாக்குகின்றது;

—நன்றி 'நம் வாழ்வு'

யாரைப்போல் எண்ணுகிறீர்களோ அவரைப்போல் ஆவீர்கள்!

கற்பனை பண்ணுங்கள்!

நீங்கள் யாரைப் போல் ஆக வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அடிக்கடி நினைக்கிறீர்களோ, அவரைப் போலாவீர்கள்!

எடுத்துக் காட்டாக நீங்கள் பணக்காரராக வேண்டுமென்று விரும்பினால், உங்களுக்குத் தெரிந்த ஒரு பணக்காரரை மனத்தில் பாவியுங்கள். அவருடைய செயல்களைக் கவனியுங்கள்; அவர்கள் எப்படிச் சம்பாதிக்கிறார் என்று எண்ணிப் பாருங்கள். அவரைபோல் ஆகவேண்டுமென்று எண்ணிக் கொண்டேயிருங்கள்; அவரைப் போலவே ஆவீர்கள்.

ஆனால் பணம் முகாமையானதன்று. அறிவே முகாமையானது. அதனால் உங்களுக்குத் தெரிந்த ஓர் அறிவாளியை, மேதையை மனத்தில் உருவேற்றிக் கொள்ளுங்கள். அவருடைய குணங்களையும் அறிவாற்றலையும் நினைத்துப் பார்த்துக் கொண்டே இருங்கள். இதற்காகப் பெரிய மேதைகளின், வீரர்களின் வரலாறுகளைப் படித்து வைத்திருந்தால், அவர்களைப் பற்றிச் சிந்திக்க வாய்ப்பாக இருக்கும்! அவர்களுடைய படங்களை வீட்டில் மாட்டி வையுங்கள். காலையில் எழுந்ததும் அவர்கள் முகத்தில் விழியுங்கள்! அவர்களைப் போலாக வேண்டுமென்று சில விநாடிகள் சொல்லிக் கொண்டால் கூடப் போதும்.

இரவில் படுத்ததும் 'நான் இப்படி ஆகப் போகிறேன்; அப்படி ஆகப் போகிறேன்' என்று உங்கள் கற்பனையை ஓட்டுங்கள். உங்கள் மனக்குதிரையை நல்ல வழியில் செலுத்துங்கள், அப்படியே தூங்கி விடுங்கள்.

இ'து ஒரு தன்மன வயப்படுத்தம். (இப்னாட்டிசம்) தூங்குவதற்கு முன் நினைப்பவை விரைவில் நடக்கும்.

ஓர் எடுத்துக் காட்டை இங்குக் கூறுகிறோம். நீங்கள் காலையில் 6 மணிக்கு விழித்தெழும் பழக்கமுள்ளவர் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், விடியற்காலை 3 மணிக்கு ஓர் ஊருக்குப் போகவேண்டும் என்றால், அதையே நினைத்துக் கொண்டிருப்பீர்கள். அதனால் காலை 3 மணிக்கெல்லாம் உங்களுக்குத் தூக்கம் கலைந்துவிடும். அஃதாவது, உங்கள் உள் மனம் நீங்கள் நினைத்த எண்ணங்களை நிறைவேற்றுகிறது. சிலர் அந்தச் சிந்தனையே இல்லாமல் கடிகார மணியை 3 மணிக்கு அடிக்கும்படி செய்து விட்டுத் தூங்கி விடுவார்கள். கடிகார மணி 3 மணிக்கு அலறும், இவர்களும் அலறி எழுவார்கள். கண்கள் எரியும்; முழுத் தூக்கத்தைத் தூங்காத நலக்கேடும் இருக்கும்.

இதனால், நீங்கள் என்ன கருதவேண்டும்; உங்கள் எண்ணங்கள் நிறைவேறுகின்றன. அதனால்தான் கூறுகிறோம்: மனத்தில் நல்ல எண்ணங்களை உருவாக்குங்கள். கற்பனை செய்யுங்கள்;

இந்த நல்ல எண்ணங்கள் உருவாக உங்கள் சூழ்நிலையும் ஒரு காரணமாக அமையும். அஃதாவது நீங்கள் உள்ள சுற்றுப்புறம், நீங்கள் பழகும் நண்பர்கள், உங்கள் குடும்பம் ஆகியவற்றின் சாயல்களாலும் நீங்கள் உருவாகுகிறீர்கள். இவையன்றி, உங்கள் கற்பனைகளும், பாவனைகளும் உங்களை உருவாக்குகின்ற முதல் காரணம். நல்ல எண்ணங்கள் நல்லவற்றுக்கும், தீய எண்ணங்கள் தீயவற்றுக்கும் காரணம் ஆகின்றன.

ஆழமான, முன்னேற்றமான நல்ல எண்ணங்கள் நிறைவேறுகின்றன; உங்களை முன்னேற்றவும் செய்கின்றன.

(அடிப்படை—'ஆனிமன்'—சூன் 90.)

மெய்யறிவர் பெருமை!

மெய்யறிவாளர்கள், அவர்களை யாராவது இழிவாகப் பேசினாலும் சரி, அல்லது பாராட்டினாலும் சரி, அவர்களுடைய ஒழுக்கத்தைப் பற்றித் தவறாகப் பேசினாலும் சரி, அல்லது அவர்களுடைய நல்ல செயல்களை இழித்துரைத்தாலும் சரி, ஒரே நிலையில்தான் இருப்பார்கள்.

அவர்களை யாராவது கடுமையாகப் பேசினால், இவர்கள் அவர்களுக்கு எதிராகக் கடுமையாகப் பேசமாட்டார்கள். இவர்களுக்கு யாராவது கெடுதல் செய்தால், இவர்கள் அவர்களுக்கு நன்மையே செய்வார்கள். யாராவது அடித்தால் திருப்பி அடிக்க மாட்டார்கள்.

அவர்கள் இதுவரை நடக்காததைப் பற்றியோ, அல்லது இனி நடக்கப் போவதைப் பற்றியோ, அவர்கள் வருத்தமோ, கவலையோ கொள்ள மாட்டார்கள்.

அந்தந்த சமயத்துக்கு என்ன செய்ய வேண்டி வருகிறதோ அதைச் செய்வார்கள். சென்றதைப் பற்றி வருத்தப்பட மாட்டார்கள். எதையும் எதிர்பார்க்கவும் மாட்டார்கள்.

நல்லவர்கள் இவர்கள் உதவியை நாடி வந்தால், தங்களால் ஆனமட்டும் அவர்களுக்கு உதவுவார்கள். மனம், சொல், செயல் இந்த மூன்றினாலும் யாருக்கும் ஒரு கெடுதலும் செய்ய மாட்டார்கள்.

இவர்கள் யாரைக் கண்டும், அருவருப்பு அடையமாட்டார்கள். யாரையும் துன்புறுத்த மாட்டார்கள். தங்களைப் பாராட்டுவதாலோ, அல்லது அவதூறு செய்வதாலோ யாருக்காவது ஊதியம் கிடைக்கிறது என்றால் அந்த ஊதியத்தை அவர்கள் அடையட்டுமே, அதனால் தங்களுக்கென்ன ஊதியம்" அல்லது இழப்பு-என்று அவர்கள் நினைப்பார்கள்.

மெய்யறிவாளர்கள் பிறர் தூற்றுவதை அமிழ்தம் என்று நினைத்து அது குறித்து மகிழ்ச்சியடைவார்கள். புகழ்ச்சியை நஞ்சு என்று நினைத்து அது குறித்து அஞ்சுவார்கள்.

—சைகீ சௌயர் (மகாபாரதம்)

இவற்றில் உள்ள மொத்த நகரங்கள் 3956; இந்நகரங்களில் மட்டும் இந்திய மக்கள் தொகையில் 25 விழுக்காட்டுப் பேர்கள் வாழுகின்றனர்:

- இந்தியாவுக்கு ஆண்டுக்கு 200 கல்லெடை (டன்) தங்கம் தேவைப்படுகிறது; இவற்றுள் இங்கேயே கிடைக்கும் தங்கம் ஆண்டுக்கு 2 கல்லெடை மட்டுமே; இது நம் தேவையில் ஒரு விழுக்காடுதான்; மீதித் தங்கத்திற்காக மட்டும் இந்திய அரசு ஆண்டுக்கு 6000 கோடி உருபா செலவிட வேண்டி யிருக்கிறது: இந்நிலையில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்குக் கள்ளக் கடத்தல் வழியாக மட்டும் ஆண்டுக்கு 160 கல்லெடை (டன்) தங்கம் கொண்டு வரப்படுகிறது.
- திருப்பதியில் மொட்டையடித்து முடிக்காணிக்கை செலுத்துபவர்கள் பற்றிய ஒரு கணக்கு: அங்கு நாள் தோறும் சமச்சரியாக 25,000 பேர் மொட்டையடித்துக் கொள்கின்றனர்; இம்முடியிறக்கும் தொழிலில் மட்டும், 600 தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர்; நான்கு நிமையங்களுக்கு ஒரு மொட்டை அடிக்கப்படுகிறது: இவ்வகையில் இறக்கப்பட்ட முடிகள் வழி ஓர் ஆண்டுக்கு 1.5 கோடி வருமானம் கிடைக்கிறது.
- இந்தியாவில் இப்போது 7 ஆயிரம் கல்லூரிகளும், 180 பல்கலைக் கழகங்களும் உள்ளன. தமிழகத்தில் மட்டும் 53 அரசுக் கலைக் கல்லூரிகள் உள்பட மொத்தம் 212 கலைக் கல்லூரிகள் உள்ளன.
- இந்தியாவில் 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 6500 கல்லெடை (டன்) தங்கத்தினுல் செய்த நகைகள் உள்ளிட்ட பொருள்கள் உள்ளன. அவற்றின் மதிப்பு 2,25,000 கோடி உருபா.
- இந்தியாவில் எழுத்து, பேச்சு முதலியவற்றில் சிறந்த இருநூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் வழக்கிலிருந்த போதிலும், அரசியல் அட்டவணையில் குறிப்பிட்ட 15 மொழிகளைப் பேசுபவர்கள் மட்டும் 95 விழுக்காட்டினர் ஆவர்.
- அசாம், நாகாலாந்து, மேகாலயம், திரிபுரா, மணிப்பூர், மிசோரம், அருணசலப் பிரதேசம்—ஆகிய ஏழு மாநிலங்களையும் சேர்த்து, இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகள் என்று குறிப்பிடப் பெறுகிறது: இவற்றின் மொத்தப் பரப்பு 2½ இலக்கம் சதுர அயிரமாத்தி (கி.மீ.) ஆகும்; இவ்வேழு மாநிலங்களின் மொத்த மக்கள் தொகை ஏறத்தாழ 2½ கோடி ஆகும்.
- இந்தியாவில் விளையும், உருவாகும் அனைத்துப் பொருள்களின் தேசிய மதிப்பு ஆண்டுக்கு உரு. 3,50,000 கோடி (மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் கோடி) உருபாக்களாகும்.
- பசிபிக் பெருங்கடலில் உள்ள 800 சிறிய தீவுகள் சேர்ந்த ஒரு நாடே பிஜி (Fiji) என்னும் நாடாகக் கூறப் பெறுகிறது. அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையே 7 இலக்கத்து 27 ஆயிரம்தான்; அவர்களில் பாதிப்பேர் இந்தியாவிலிருந்து சென்றவர்கள்: அவர்களில் முக்கால் பங்கினர் தமிழர்கள்: பிஜித்தீவின் பழங்குடியினர் மேலனேசியர் என்று அழைக்கப் பெறுகின்றனர். பிஜியின் முகாமை விளைவே கரும்புதான்; சர்க்கரை உருவாக்கமே அங்கு முகாமைத் தொழில்.
- ஆடு, மாடு, எருமை முதலிய விலங்குகளின் தோல்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இந்தியாவுக்கு ஓர் ஆண்டுக்கு ஏறத்தாழ 2050 கோடி உருபா வருமானம் வருகிறது.

தமிழில் அகராதிகள்!

நம் தமிழ் மொழியில் தொன்மையான காலத்திலேயே அகராதிப் பணி தொடங்கி விட்டது.

தொல்காப்பியம் உரியியலை நோக்குங்கால், ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்பேயே அகராதித் துறையில் நாம் அடியெடுத்து வைத்து விட்டோம் என்று பெருமை பேசிக் கொள்ளலாம்.

தமிழில் அகராதி அமைப்பதற்கு முன்னதாகத் தோன்றிய நிகண்டுகள் கி.பி.9-முதலே கிடைக்கின்றன.

சேந்தன் திவாகரமே தமிழில் கிடைத்துள்ள முதல் நிகண்டு நூலாகும். திவாகர முனிவரால் செய்யப் பெற்றது இது. இது 9500 சொற்களுக்கு மேல் பொருள் கூறுகிறது.

திவாகரத்தையடுத்துப் பிங்கலநிகண்டு (பிங்கலந்தை) உரிச்சொல் நிகண்டு, கயாதர நிகண்டு, சூடாமணி நிகண்டு, —ஆகியவை தோன்றின.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் புலியூர் சிதம்பர ரேவண சித்தர் என்பவர் அகராதி நிகண்டு என்ற நூலினைச் செய்தார். தமிழில் முதலில் அகர வரிசையில் தோன்றிய அகராதி இதுவே. ஆனால் இதில் முதல் எழுத்துகள் மட்டுமே நிரல்(வரிசைப்)படுத்தப் பெற்றுள்ளன.

இதன் பின்பு தோன்றிய பொதிகை நிகண்டில் முதல் இரண்டு எழுத்துகள் அளவிலேயே சொற்கள் நிரல்படுத்தப் பெற்றுள்ளன.

ஆனால், படிப்படியாக வளர்ந்து வந்த அகராதிகளில் சொற்களின் எண்ணிக்கை கூடியுள்ளது.

இவ் வரிசையில் அரும் பொருள் விளக்க நிகண்டு, நாநார்த்த தீபிகை, வேதகிரியார் சூடாமணி, சிந்தாமணி நிகண்டுகள், விரிவு நிகண்டு ஆகியன குறிப்பிடத் தக்கவை.

நாமதீப நிகண்டு என்னும் நூலில் 12,000 சொற்களுக்குப் பொருள்கள் கூறப்பட்டன.

தொகை நிகண்டு, விரிவு நிகண்டு தொகைப் பெயர்களைக் குறிக்கும் நிகண்டுகள்.

17-ஆம் நூற்றாண்டில் பெசுக்கி பாதிரியார் (வீரமா முனிவர்) செய்த சதுரகராதி குறிப்பிடத் தக்க சிறப்புடையது.

ஏறத்தாழ 50க்கும் மேற்பட்ட தமிழ் நிகண்டுகள், மொழி, மருத்துவம், கணியம் (astrology) போன்ற பல துறைகளிலும் தமிழின் சொல்லதிகாரிகளாகத் தோன்றி மொழிவளத்தைக் காத்துள்ளன.

—மா. சற்குணம். க.மு.

சாதி இல்லை! மதம் இல்லை!

பள்ளிச் சான்றிதழ்களில் பதிந்து கொள்ள உரிமை உண்டு.

தமிழக அரசு-கல்வித்துறை-

அரசுக் கட்டளை (9 நிலை) எண்: 1210 நாள் 2-7-1973.

இடை நிலைப் பள்ளிச் சான்றிதழ், மற்றும் மாற்றல் சான்றிதழ் ஆகியவற்றில், சாதி இல்லை மதம் இல்லை—என்று குறிப்டவோ, அந்த இரண்டு பத்திகளுக்கும் எதிரான இடத்தை நிரப்பாமல் விட்டு விடவோ, எவரும் விரும்பினால், அவ்வாறே செய்யும் உரிமையை அவருக்கு அளிக்கலாம் எனப் பள்ளிக் கல்வி இயக்குநரால் அறிவிக்கப் பெற்றிருக்கிறது.

(ஆளுநரின் கட்டளைப்படி) (கையொப்பம்)

எம். கே. பாலகோபாலன். அரசுத் துணைச்செயலர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)